வியாழக்கிழமை, 1974 மார்ச் 28.

தமிழ்நாடு சட்டப் பேரவை

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Sale of harmful drugs.

*644 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the Union Government have directed the State Drug Control authorities to keep frequent watch over the sale of harmful drugs in 1972; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) விவரமான அறிக்கை @ ஒன்று அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. த. சோனையா: மத்திய சர்க்காரிடம் இருந்து எந்தவிதமான உத்தரவும் வரவில்லை என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மருந்து என்ற பெயரால் போதை தாக்கூடிய சில மருந்துகளை கடைகளில் விற்பனை செய்கிறார்களே, அப்படிப்பட்ட கடைகளைப் பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராய் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 1972-ஆம் ஆண்டில் மத்திய அரசால் ஆணை பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆலோசனையில்—குறிப்பிட்ட கம்பெனிகளில் தயாரிக்கப்படுகிற மயக்க மருந்துகள் வழங்கப்படுகிற முறையில் —அவை நியாயமான முறையில் மருத்துவர்களால் வழங்கப்படுகிற

@ 862 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ப்ரிஸ்க்ரிப்ஷன் அடிப்படையில் விற்கப்படுகிறதா, அல்லது வேறுவகையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி தெரிவிக்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள துணை இயக்குநர்—டெபுடி ட்ரக் கண்ட்ரோலர்—இந்த ஏற்பாட்டை ஆய்வு அதிகாரிகளுக்கு தெரிவித்து ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் மூலமாக இந்த மருந்துகள் விற்பனை ஆகிற இடங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும் பள்ளிகள், கல்லூரிகள் இருக்கும் இடங்களுக்கு அருகாமையிலுள்ள மருந்து விற்பனை நிலையங்கள் அடிக்கடி பரிசிலனை செய்யப் படுகின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மருந்தின் பெயர் மெத்தாக்வாலோ Hydrocholoride including Nandra இந்த மருந்து அத்தனையும் மயக்கம் உண்டாக்கக் கூடியது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தமிழ் நாட்டில் ஆங்காங்கு திரிகிற ஹிப்பிகள் சில பேர்களுக்கு இதுபோன்ற மருந்துகளை விநியோகம் செய்வ தாகத் தெரிகிறது. இப்படி போதை தரும் மருந்துகளை விநியோகம் செய்கிற ஹிப்பிகள் மீது 1972-லே வழக்கு தொடரப்பட்டிருந்தால் அந்த விவரத்தைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அனுமதிக்கப்பட்ட அல்லது அனுமதிக் கப்படாத மருந்து விற்பனை நிலையங்களாக இருந்தால் அவற்றைத்தான் ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் ஆய்வு செய்ய முடியும். நடைப் பயணத்தில் ஹிப்பிகள் செய்கிற காரியங்களை இன்றைக்கு ட்ரக் இன்ஸ்பெக்டர்களால் பரிசீலிக்க முடியாது. அப்படி ஹிப்பிகள் செய்வதாகத் தெரிந்தால் அவர்கள் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கும். அப்படி எந்தக் குறிப்பும் இப்போது என்னிடத்தில் இல்லை.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவர் அவர்களே, இப்படி ஊறு விளைவிக்கும் மருந்துகளைவிட—சப் ஸ்டாண்டர்ட் மருந்துகளை—Pharmaceuticals விற்பனை செய்கிறார்களே, இதுபோன்ற சப் ஸ்டாண்ட மருந்துகளில் மக்கள் பணம் வேஸ்ட் ஆகாமல் இருக்க, ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் அதையும் கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தக் கேள்வி ஊறு விளைவிக்கும் மருந்துகளைப் பற்றியது. தரக்குறைவான மருந்துகள் வழங்கப்பட்டால், அது போன்ற குறை மருந்தகங்களில் இருந்தோ, டாக்டர்கள், பொதுமக்களிடம் இருந்தோ வந்தால் அவையும் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு—அதைத் தடுப் பதற்கும், தரக்குறைவான மருந்துகளைத் தயார் செய்யும் கம்பெனிகளை ப்ளாக் லிஸ்ட் செய்வதற்கும் சில முறைகள் இருக்கின்றன. தரக்குறைவான மருந்து

1974 மார்ச் 28]

என்பதை ஆராய்ச்சி நிலையத்தில்தான் கண்டுபிடிக்க முடியும். அனுபவத்தினால் தனிப்பட்ட டாக்டர்களும் இதைக் கண்டுபிடித்துவிட முடியும். அவற்றை எழுதி அனுப்பினால் அவை பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊறு விளைவிக்கும் மருந்துகளை விற்பனை நிலையங்களில் தடுப்பதைவிட, தயாரிக்கும் இடத்திலேயே தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருந்துகள் ஊறு விளைவிப்பதோ, நலன் விளைவிப்பதோ உபயோகிப்பவர்களுடைய நிலையைப் பொறுத்திருக்கிறது. மருந்து என்ற முறையில் மயக்க மருந்துகள் தேவைப்படுகின்றன. மருந்தாக டாக்டர்களின் ஆலோசனைபேரில் உபயோகப்படுத்துகிறபோது அது நலன் விளைவிக்கிறது. போதை தரும் பொருள் என்று சாதாரணமானவர்கள் உபயோகப்படுத்துகிறபோதுதான் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. ஆகவேதான், தவறான உபயோகத்தைத் தடுக்க, அவர்களுக்கு விற்பனையாளர்கள் உதவியாக இருக்கக்கூடாது, இதில் ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்கிற முறையில் இந்த மருந்துகள் விற்பனைபற்றி ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் ஆய்வு செய்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : அந்த மெடிசன்களில் குறிப்பிட்ட காலம் வரைக்கும் தான் சக்தி இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். இதுபோல குறிப்பிட்ட காலம் கடந்த மருந்துகளைக் கூட சிலபேர் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்துவிடுகிறார்கள் என்கிற பல புகார்களைச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட விற்பனையையும் கட்டுப்படுத்த, அரசாங்கம் டிரக் இன்ஸ்பெக்டர்கள் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மருத்துவர்களாக இருந்தாலும், மருந்து உற்பத்தியாளர்களாக இருந்தாலும், விநியோகிப்பவர்களாக இருந்தாலும்—நாணயமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்வதுதான் முக்கியமான அடிப்படை. இதனை மீறி காலம் கடந்த மருந்துகளை வழங்குவார்களானால், அது கண்டுபிடிக்கப்பட்டால் உடனே நடவடிக்கை எடுப்பார்கள். எந்த மருந்தகத்தில் இதுபோல காலம் கடந்த மருந்து விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்தாலும், உடனே அவர்கள் மீது—சில மருந்துகளையோ, அத்தனை மருந்துகளையுமோ விற்பனை செய்வதைத் தடுக்க இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். எனக்குத் தெரிந்து அண்மையில் கூட ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை அறிவேன்.